பனிப்பொழிவு ஏற்படத் துவங்கும்போது நீங்கள் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்

Tamil

- பெரிய சாலைகளில் முதலில் பனியகற்றப்படும், அதன் பின்னர் உள்ளூர்ச் சாலைகளில் 5 செமீ உயரத்திற்கு பனி குவிந்த பின்னர் அகற்றப்படும்.
- பனி அகற்றும்பணியின்போது வாகனங்களை நிறுத்திவைக்கக் கூடாது- அதற்கான அனுமதிகளும் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றன.
- விதிகளுக்கு முரணாக நிறுத்தப்படும் வாகனங்களுக்கு அபராத டிக்கட் அனுப்பப் படலாம், கட்டி இழுத்துச் செல்லப்படலாம் மற்றும் உரிமையாளரின் செலவில் கைப்பற்றி இழுத்துச் செல்லப்படலாம்.
- பனிப்பொழிவு முடிந்த மறுநாள் காலை 11 மணி வாக்கில் பக்கவாட்டு பாதைகளில் குடியிருப்பு வாசிகள் பனியகற்றிவிட வேண்டும்.
- பனி அகற்றுவதற்கான நிதியுதவித் திட்டம் மூலமாக மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உதவி பெறலாம்.

பாதுகாப்பாக இருங்கள்.
தயாராக இருங்கள்

311 **brampton.ca**/snow

BRAMPTON

நல்ல சுற்றுப்புறத்தார், நல்ல சமுதாயங்கள்

எளிய சில செயல்கள் நமது சுற்றுப்புறங்களைப் பாதுகாப்பாகவும் வலிமையானதாகவும் ஆக்கும்

- பக்கவாட்டுப் பாதைகள், இருசக்கர வாகன வழிகளை அல்லது தீயணைப்பு பாதைகளை மறிக்காதீர்கள். வீதிகளில் வாகனங்களை நிறுத்துவது 3 மணி நேரத்துக்கு மட்டுமே எனக் கட்டுப்படுத்தப்படுகிறது மற்றும் விடிகாலை 2 மணி முதல் அதிகாலை 6 மணி வரை அனுமதிக்கப்படுவதில்லை.
- இரைச்சல் உண்டாக்காமல் இருப்பதில் கவனம் கொள்ளுங்கள். உரத்த இசை, கட்டுமானக் கருவிகள் மற்றும் அதிக்கப்படியான நாய் குரைத்தலை தவிர்க்கவும். மின்சாரக் கருவிகள், புல்வெட்டும் இயந்திரம் மற்றும் வாகனங்கள் பழுது பார்ப்பது இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை தடை செய்யப்படுகிறது; வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் காலை 9 மணி வரை விதிவிலக்கு உண்டு.
- குப்பை வண்டிகளை முறையாக வைத்திருந்து குப்பைகளை பொறுப்புடன் அப்புறப்படுத்தி, முற்றங்களைத் தூய்மையாக வைத்திருந்து, உங்கள் கட்டிட சுற்றுப்புறத்தைப் பராமரிப்பு செய்யுங்கள்.
- வார்டுகள் 1, 2, 3, 4, 5, 6, 7 மற்றும் 8 இல் இருக்கும் கட்டிட உரிமையாளர்கள் ஒன்றிலிருந்து நான்கு அலகுகள் வரை வாடகைக்கு விட்டிருந்தால் குடியிருப்புக்கான வாடகை உரிமம் பெறும் முன்னோடித் திட்டத்தின் கீழாக ஒரு உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

311 **brampton.ca**/bylaws BRAMPTON